Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 36 / 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.4**

| | | | |
|---|---|---|---|
| Name: | பாலசுப்ரமணியம் | Calling: | டிரைவர் |
| Father's/Husband's Name: | நாகேந்திரன் | Religion: | |
| Village: | அம்பலூர் | Age: | 40 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.02.2026.

(எதிரி ஆஜர்.)

அ.சா.4 சாட்சி மனுவின் பேரில் அழைத்து குறுக்கு விசாரணை

நான் முதன்மை விசாரணையில் கூறிய விவரத்தை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். அந்த தகவலை தவிர வேறு ஏதேனும் போலிசார் விசாரணையில் கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். போலிசார் என்னிடம் பெயர், முகவரி கேட்டுக்கொண்டு குறிப்பெடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான், காவல் நிலையத்தில் தான் என்னை விசாரித்தார்கள், அதன்பின் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். அந்த குறிப்பெடுத்த தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்பட்ட கையொப்பம் அந்த கையொப்பம் தான் என்றால் சரிதான். ஆறுமுகம் எனக்கு என்ன உறவுமுறை என்றால் பக்கத்து வீட்டுக்காரர். ஆறுமுகம் குடும்பத்திற்கும் எதிரிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கும் எதிரிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். நான் எதிரி மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக தான் அவருக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) பாலசுப்ரமணியம்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K